REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 10உ செவ்வாய் (22—2—55) ★ ★ வெளியூர்: மாசி 11உ புதன் (23—2—55) [இதழ் 215

மண விழாவில் 'அரிசனங்'கள் பாடக்கூடாதாம்!

வடக்கு குஜராத்தில் ரங்பூர் என்ற கிராமத்தில், தங்களுடைய மண விழாக்களில் அரிசனங்கள் பாடக்கூடாது என்பது வழக்கில் உள்ளது. அவ்வழக்கத்திற்கு மாருக தங்கள் சமூகத்தினருக்குள் நடைபெற்ற மணத்தின்போது, அரிசனப் பெண்கள் மணப் பாட்டு பாடினர். இது கேட்டு ஆத்திரங்கொண்ட அக்கிராம உயர் ஜாதியினர், பாடின அரிசனர்களைத் தாக்கினர்; சிலரைப் படுகாயப்படுத்தினர். அத்துடன் நிற்காமல், அரிசனங்களுக்கு அத்தியாவசியமான உணவுப் பொருட்களை விற்க முடியாது எனவும் மறுத்து விட்டனர். இத்தகவலை அரிசனங்கள், மாவட்ட அதிகாரிகளிடத்திலும், முதலமைச்சரிடத்திலும், பின்தள்ளப்பட்ட இலாகா அமைச்சரிடத்திலும் அறிவித்துள்ளனர்.

'20-3-55: ஐந்தாண்டு திட்ட கண்டன நாள்!'

இந்தியசர்க்கார் போக்குக்கு தி. மு. கழகத்தின் எதிர்ப்பு

நாடகசட்டத்திற்குஎதிராக நடவடிக்கை எடுக்க முடிவு

தொழிலாளரிடை பணி புரிய கழகத் தோழர்களுக்குக் கட்டளை

ஜூன் திங்களில் மாநில மாநாடு

தி. மு. கழகப் பொதுக் குழு தீர்மானங்கள்

20—2—55-ல், கோவைக்கடுத்த பேரூரில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்குழு நிறைவேற்றிய தீர்மானங்கள் இங்கு தரப்படுகிறது :—

வெறும் கண்துடைப்பு

அண்மையில் நடைபெற்ற அனைத்திந்திய காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 'சோஷலிசம் மாதிரி' ஒரு பொருளாதார அமைப்பை உருவாக்குவது என்ற தீர்மானமானது, ஏழை - நடுத்தர மக்களிடையே உருவாகி வளர்ந்துவரும் முற்போக்கு சக்தியினை சிதைவுறச் செய்ய நடத்தப்படும் ஓர் கண்துடைப்பும், ஏமாற்றுத்தனமும் ஆகும் என்பதை இப்பொதுக் குழு, மக்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

—மதியழகன் ; இளங்கோ

★

கண்டன நாள்

இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்கள் என்ற பெயரால், ஏற்கனவே வளம் குவிந்துள்ள வடநாட்டில், மேலும் மேலும் புதிய தொழிற்சாலைகள், அணைக்கட்டுகள் ஆகியவைகளை அமைத்துக்கொண்டு, தொழில் துறை வழிவகையில் மிகவும் பின்தங்கியுள்ள தென்னுட்டில், தொழில் வளர்ச்சியின் அடிப்படை சாதனங்களான நிலக்கரி, இரும்பு, மின்சார உற்பத்தி ஆகியவைகளில் உதாசீனப்படுத்திவரும் இந்திய சர்க்காரின் போக்கினை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஏற்கனவே தென்னுட்டில் இடம் பெற்றுள்ள பெங்களூர் பால் பண்ணை ஆராய்ச்சி நிலையம், குன்னூர் உணவு ஆராய்ச்சி நிலையம் ஆகியவைகளைக்கூட இங்கிருந்து மாற்றுவதென்று டில்லி சர்க்கார் செய்துள்ள முடிவை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளாக நாம் வற்புறுத்திவரும் வேண்டுகோளை உதாசினப்படுத்திவரும் இந்திய சர்க்காரின் போக்கைக் கண்டிக்கும் அறிகுறியாக 20—3—55-ம் நாள் அன்று "ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்" நடத்துமாறு தி. மு. கழகக் கிளைகளை இப்பொதுக் குழு கேட்டுக்கொள்ளுகிறது.

—ஈ. வெ. கி. சம்பத் ; என். வி. நடராசன்

★

நாடகச் சட்டம்

பொதுவாக முற்போக்குக் கருத்துக்கள் பரவுவதைத் தடுத்துவிட வேண்டுமென்றும், குறிப்பாக திராவிட இயக்கம் பரப்பிச் செல்வாக்கு உண்டாக்கும் கருத்துக்களைத் தடுத்துவிடவேண்டுமென்றும் சென்னை சர்க்கார் நிறைவேற்றி இருக்கும் நாடகத் தடைச் சட்டத்தை இந்தப் பொதுக்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், இத்தகைய பிற்போக்கான சட்டத்தை ரத்து செய்யும்படி வலியுறுத்துகிறது.

தி. மு. கழகத் தோழர்கள் எப்போதும்போலும், மேலும் தீவிரமாகவும், பண்புடனும் திராவிட இயக்கக் கருத்துக்களைப் பரப்பும் நாடகங்களை நடத்தி மறுமலர்ச்சிக்கு ஆக்கமளிக்க வேண்டுவதுடன், இத்தகைய நாடகப்பணி

(4-ம் பக்கம் பார்க்க.)

வரவு-செலவுத் திட்ட பேச்சு

தமிழ் மொழியிலும் பிரசுரிக்கப்படும்

வருகிற சனிக்கிழமையன்று, சென்னை மாநில 1955—56-ம் ஆண்டு வரவு—செலவு திட்டங்கள் தயாரிக்கப்படுமென்றும், வரவு—செலவு பற்றிய நிதி மந்திரி சுப்பிரமணியத்தின் சொற்பொழிவுகள் தமிழ் மொழியிலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என்றும் தெரிகிறது.

பூமி அதிர்ச்சி

கராச்சி, பிப். 21—

குவெட்டாவில் மீண்டும் இன்று காலை பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் அறிவிக்கின்றன.

சொத்துக்களுக்குப் பெரிய சேதமோ, அல்லது உயிர்ச் சேதமோ எதுவும் ஏற்பட்டுள்ளதாகத் தகவல் கிடையாது.

தி.மு.கழகப்பொதுக்குழு கலைக்கப்பட்டது?

பேரூர் கூட்ட நடவடிக்கையின் விவரம்

தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம், கோவை நகரை அடுத்த பேரூரில், துளுவ வேளாளர் அற நிலையத்தில், 20—2—55 ஞாயிறு காலை முதல் மாலை வரை கூடி, பல பிரச்சினைகள் குறித்தும் விவாதித்து, முக்கியமான முடிவுகள் பலவற்றை மேற்கொண்டுள்ளது.

பொதுக் குழுக் கூட்டத்திற்கு பல மாவட்டங்களிலிருந்தும் 60-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் வந்திருந்தனர். ஏராளமானவர்கள், தாங்கள் குழுவிற்கு வர இயலாது போனாலும் குழு முடிவுகளை ஒப்புக் கொள்வதாகக் கடித மூலமும், தந்தி மூலமும் ஒப்புதல் தெரிவித்திருந்தனர்.

பொதுக் குழுக் கூட்டத்தை ஒட்டி, கோவை நகர தி. மு. கழகத்தினர், நகரெங்கும் தோரணங்களாலும் வரவேற்பு வளைவுகளாலும் அலங்கரித்திருந்தனர்.

ஞாயிறன்று காலையில், பல பொதுக் குழு உறுப்பினர்களும் கோவை வந்தடைந்தனர்.

காலையில் 8 மணியளவில் கோவை புகைவண்டி நிலையத்திலிருந்து ஓர் மாபெரும் ஊர்வலம் நடத்தப்பட்டது. ஆயிரக் கணக்கான பொதுமக்களும், ஏராளமான கழகத் தோழர்களும், கழகக் கொடிகளுடன் ஊர்வலத்தில் அணிவகுத்து நின்றனர். ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகள் வழியாக, பேரூர் வந்தடைந்தது. அங்கு, காலை 10½ மணியளவில், கோவிலுக்கருகில், பேரூர் தி. மு. கழகச் சார்பில் கொடியேற்று விழா நடைபெற்றது. பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்கள், ஆயிரக் கணக்

(4-ம் பக்கம் பார்க்க)

'விழிப்புற்ற திராவிடத்தை ஆவடி தீர்மானம் ஏமாற்ருது'

'தொழிலாளரிடை பணி புரியும் முடிவு பல கட்சியினருக்குப் பேரிடியாகும்!'

கோவை பொதுக் கூட்டத்தில் சம்பத் விளக்கம்

"தி. மு. கழகம் தொழிற் சங்க இயக்கத்திலே நேரிடையாக ஈடுபடுவது என்ற ஒரு முடிவும், பொதுக் குழுவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது; இந்த முடிவு ஏற்கனவே தொழிற் சங்க இயக்கத்தில் ஈடுபட்டு வருகிற பல கட்சியினருக்குப் பேரிடி போன்ற ஒன்ருகும்; ஏற்கனவே, தி. மு. கழகம், 'தொழிற் சங்கங்களை அமைத்து பணி புரிவது,' என்று கொண்டிருந்த முடிவை அமுல் செய்யும் வகையில் தீர்மானம் அமைந்துள்ளது,"

—என்று, கோவையில் சிதம்பரம் பூங்காவில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகையில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் குறிப்பிட்டார்.

கோவை, பிப். 21—

கோவை நகர தி. மு. கழகச் சார்பில் கோவை சிதம்பரம் பூங்காவில், நேற்று மாலை 7 மணியளவில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் சுமார் ஒரு லட்சம் மக்கள் கலந்துகொண்டனர்.

நேற்று காலை முதல் மாலைவரை கோவை நகரை அடுத்த பேரூரில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்தப் பொதுக்கூட்டத்தில், பொதுக் குழுவின் முடிவுகளைத் தெரிந்துகொள்ளும் ஆர்வத்துடன் மக்கள் வெள்ளம்போல் கூடியிருந்தனர்.

கூட்டத்திற்கு தோழர் அ. பழனிச்சாமி தலைமை வகித்தார்.

துவக்கத்தில் பல தோழர்கள் கழகப் பண் இசைத்தனர்.

பேரூரில் நடைபெற்ற கழகப் பொதுக் குழுவின் முடிவுகளை விளக்கி தோழர்கள் எஸ். அப்பாவு, என். வி. நடராசன், அன்பில் தருமலிங்கம், அ. பொன்னம்பலனுர், கே. ஏ. மதியழகன், மதுரை எஸ். முத்து, ஆசைத்தம்பி, எம். எஸ். இராமசாமி, இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், பொதுச் செயலாளர் அண்ணுதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கம் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

★

தோழர் ஈ. வெ. கி. சம்பத் தொடர்ந்து பேசியதாவது :—

"தி. மு. கழகப் பொதுக் குழு இன்றைய தினம் காலையில் கூடி, பல முக்கியமான முடிவுகளை மேற்கொண்டிருக்கிறது

"இங்கு உங்களிடையே பலர், அங்கு மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை விளக்கி உரையாற்றியிருக்கிருர்கள்.

"ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் 'சோஷலிசம் மாதிரி சமூக அமைப்பு' என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருப்பதைக் கண்டித்தும் கழகப் பொதுக் குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

"காங்கிரஸ் இத்தகு ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருப்பதின் உள்நோக்கத்தையும், கழகத் தீர்மானம் சுட்டிக்காட்டியுள்ளது.

"இந்தத் தென்னுட்டிலே —

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 22—2—1955 செவ்வாய்

உண்மை விளக்கம்!

இந்தியத் துணைக்கண்டத்தில் இருந்துவரும் மாநில ஏற்பாடு, வெள்ளை ஏகாதிபத்தியத்தின் கைவேலையாகும். தங்கள் பிடிப்பைக் கெட்டிப்படுத்த உதவும் ஒரு நிர்வாக அடிப்படையிலேயே மாநிலங்களை இவ்வாறு அமைத்து ஆட்சி செய்துவந்தது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்.

இவ்வடிப்படைத் தகவலை ஊருக்கு உரைத்தவர்களும் காங்கிரஸ் தலைவர்கள்தான். 'இவ்வேற்பாடு பொருத்தமற்றது; மொழி அடிப்படையில் இதனைத் திருத்தி அமைக்க வேண்டும்' எனத் திட்டவட்டமாகக் கூறிவந்தவர்களும் அதே காங்கிரஸ் கனவான்கள்தான்.

ஒரு அன்னிய ஆட்சிக்கு எதிராக நாட்டு மக்களின் ஆத்திரத்தைத் திரட்டுவதற்கு, கிடைக்கும் ஒவ்வொரு சிறு வாய்ப்பையும் குறிப்பிட்ட ஒரு விடுதலை இயக்கம் பயன்படுத்திக்கொள்ளத் துளியும் தவறுது—தவறக் கூடாது என்பதை அப்படியே காங்கிரஸ் தலைவர்கள் மேற்கொண்டனர். அத்தகு வாய்ப்புகள் அனைத்திலும் பலம் பொருந்திய முக்கிய வாய்ப்பாக, மொழிவழி மாநில அமைப்புக் கோட்பாடு, காங்கிரஸ் விடுதலைப் போராட்டத்திற்குப் பெருந்துணை செய்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

விடுதலைப் போராட்டக் காலத்தில் தங்களாலேயே நியாயமானது என ஒப்புக்கொள்ளப்பட்டு, உருவாக்கி வளர்த்துவரப்பட்ட ஒரு முக்கியக் கொள்கையை உடனடியாக இல்லையானுலும், மெள்ள மெள்ளவாவது நிறைவேற்றி வைக்க வேண்டிய பொறுப்பை, விடுதலை கிடைத்த பிறகு காங்கிரஸ் தலைவர்கள் கைவிட்டுவிட்டனர். அந்த அளவுடன் நின்றிருந்தாலாவது, மொழிவழி மாநில கோரிக்கை தீவிரம் பெருமல், தற்காலிகமாகத் தணிந்திருக்க இடமேற்பட்டிருக்கும். ஆனுல், காங்கிரஸ் தலைவர்களோ, தங்களாலேயே நியாயமானது — இன்றியமையாதத் தேவையானது என ஒரு காலத்தில் ஒப்புக்கொண்டு இடையருது வலியுறுத்திவந்த அதே கோரிக்கையை, நியாயமற்றது, ஒற்றுமைக்கு உலைவைக்கக் கூடியது, இந்தியத் துணைக் கண்டத்தைத் துண்டாடக்கூடியது எனப் பேசத் தொடங்கினர். மொழிவழி கோரிக்கையினரை நாட்டுப் பகைவர்கள் எனக்குறைகூறும் அளவிற்குக் காங்கிரஸ் தலைவர்களின் நாக்கு நீண்டுவிட்டது.

இந்த நேரத்தில் ஆந்திர மொழி மாநில கோரிக்கை ஆந்திரர்களிடம் வலுப்பெற்றது. இந்தியா முழுவதிலும் அறிமுகமான ஆந்திரத் தலைவர்களிடம், சிறு சிறு கருத்து வேற்றுமை இருந்துவந்தபோதிலும், மூல கோரிக்கையான மொழி மாநில ஏற்பாட்டில் ஒருமைப்பாடு இருந்தது. அத்தலைவர்களின் ஒருமுகமான கோரிக்கையை அலட்சியப்படுத்துவது முடியாத ஒன்றுகிவிட்டது.

இருந்தாலும், ஆந்திரத் தலைவர்களின் ஒருமனப்பட்ட கோரிக்கையை உடனடியாக ஒப்புக்கொள்ள வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் திருவுளம் கொள்ளவில்லை. கோரிக்கைக்கு உடன்பட முடியாது என வெளிப்படையாக மறுத்துக்கூற அவர்களுக்குத் துணிவில்லையேயல்லாது, கூடுமானவரை காலதாமதம் செய்வதில் வடநாட்டுத் தலைவர்களுக்குத் துணிவு இருக்கவே இருந்தது.

காலதாமதம் செய்வதால் கோரிக்கையை ஆந்திரர் கைவிட்டுவிடுவர் என காங்கிரஸ் மேலிடம் கற்பனை செய்துகொண்டது. ஆனுல், அவர்கள் எதிர்பார்த்ததற்கு நேர்மாருக கோரிக்கை வெற்றி பெறச் செய்வதில், ஆந்திரர் தீவிரமும், முன்னிலும் கூடுதலான பிடிவாதமும் காட்டத் தொடங்கினர். பிரச்சினையில் எந்த அளவு காங்கிரஸ் மேலிடம் ஆமை வேகம் காட்டிற்றே, அதே அளவு நினைத்ததைப் பெறுவதில் ஆந்திரர் முயல் வேகம் கொண்டனர்.

'மதராஸ் மனதே' எனச் சில பல ஆந்திரத் தலைவர்கள் ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினர். கோரிக்கையைத் தட்டிக்கழிப்பதற்குத் தருணம் பார்த்துக்கொண்டிருந்த காங்கிரஸ் மேலிடம், சில பல ஆந்திரத் தலைவர்களின் இப்பேராசையை ஒரு புகலாகக் கொண்டு, மூலமான ஆந்திர மாநில அமைப்பை உருவாகவிடாமல் அழித்துவிடலாம் என மனப்பால் குடித்தது. இந்நோக்கின் உடனடி விளைவுதான் தார் ஆய்வுக் குழு.

அவ்வாய்வுக் குழுவின் தலைவரான தாரோ, மொழிவழி மாநில அமைப்பு இந்திய ஒற்றுமையைத் தகர்த்துவிடும் ஒரு சிற்றுளி என அழுத்தம் திருத்தமாகத் தனது அறிக்கையில் கூறிவிட்டார். ஏற்கனவே, மொழிவழி மாநில அமைப்பின் விளைவு குறித்து காங்கிரஸ் மேலிடம் கொண்டிருந்த ஐயத்தை, தார் குழுவின் கருத்து உறுதிப்படுத்திவிட்டது. எனவே, ஆந்திரர் கோரிக்கையை மேலும் தள்ளிப்போடுவது என காங்கிரஸ் மேலிடம் முடிவுக்கு வந்துவிட்டது.

காங்கிரஸ் மேலிடத்தின் பிடிவாதத்திற்குக் கொஞ்சமும் குறைந்ததாக ஆந்திரர்களின் பிடிவாதம் இருக்கவில்லை. பொட்டி சீராமுலு உண்ணுநோன்பிருந்து உயிர்விட்டார்; ஆந்திர மக்கள் கொதித்தெழுந்தனர்; ஆந்திரப் பகுதியைப் பொறுத்தவரையில் முறையான ஆட்சி இரண்டொரு நாள் நிலைகுலைந்துவிட்டது.

நெருக்கடி வேறு உருவம் கொள்வதற்குள், இந்தியப் பேரரசு விழிப்படைந்து விட்டது. 'இதோ! ஆந்திர மாநிலம்!' என தாள மேளத்தோடு வழங்கிவிட்டது.

மற்ற மொழிவழி மாநில கோரிக்கையினருக்கு, ஆந்திர மாநில அமைப்பு பின்பற்றத்தக்க ஒரு வழிகாட்டியாகிவிடுமோ என்பது காங்கிரஸ் மேலிடத்தின் அச்சமாகி விட்டது. விரும்பக்கூடாத அந்நிலைக்கு பிற மொழிவழி மாநில கோரிக்கையினரும் துரத்தப்படாமல் தடுத்தாட்கொள்ளப்பட வேண்டும் எனும் நினைப்புடன், **மாநில திருத்த அமைப்புக் குழு** என்ற பெயரிய ஒரு குழுவை இந்தியப் பேரரசு உடனடியாக உருவாக்கியது.

அக்குழுவிற்கு இடப்பட்டுள்ள பெயரைப் போலவே, மொழிவழி மாநில கோரிக்கைக் கருத்தைத் தீவிரமாக எதிர்ப்பவர்களாகப் பார்த்து, அக்குழு உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. தலைவர் பாசல் அலியின் கருத்து மதில் மேல் பூனை நிலையை ஒத்திருப்பது. சர்தார் பணிக்கரும், எச். என். குன்ஸ்ருவும், மொழிவழி மாநில கோரிக்கை நாட்டைத் துண்டாடிவிடக் கூடிய 'கொடுவாள்' எனக் கருதுபவர்கள்—நம்பிக்கிடப்பவர்கள்.

இக்கருத்தை தங்கள் மனதிற்குள் மறைத்து வைத்துக் கொள்ளாமல், வாய்ப்புகிடைத்தாலும், கிடைக்காமற் போனுலும், வலிய வலிய நாடெங்கும் நாள் தவருமல் உரத்துக் கூவிக்கொண்டு இருப்பவர்களாவர். மாநிலங்களைத் திருத்தி அமைப்பது குறித்து இவர்கள் வெளியிட இருக்கும் அறிக்கை எத்தகைய முடிவு கொண்டதாக இருக்கும் என்பதை அறிய ஆருடம் கேட்கத் தேவையே இல்லை. விளையும் பயிர் முளையிலே என்பார்கள். எஜமானனை இந்தியப் பேரரசின் நோக்கத்தை, தார் குழுவின் முடிவை வழிகாட்டியாகக் கொண்டு, திறம்பட நிறைவேற்றி வைக்கக் கூடியதாகத்தான், இக்குழு அறிக்கைஇருக்கும் என்பதில், எவருக்கும் துளி ஐயமிருக்க நியாயமில்லை. மாநில திருத்த அமைப்புக் குழுவின் தோற்றமும், அது அறிவிக்க இருக்கும் முடிவும் குறித்த உண்மை இதுதான்.

நல்ல திட்டம்தான்!

ஆனுல் பரந்த மனப்பான்மை வேண்டுமே!

புதுடில்லி, பிப். 21—

நாட்டில் நோய் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பது, கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகளை விரிவாக்குவது ஆகியவைகளுக்கே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று மத்திய சுகாதார அமைச்சர் திருமதி அமிருத கௌரி அம்மையார் வற்புறுத்தியுள்ளாராம்.

ஆதாரக் கல்வியை ஆராய

கல்விக் குழு நியமனம்

திண்டுக்கல், பிப். 19—

மாநிலங்களில் ஆதாரக் கல்வி அடைந்துள்ள முன்னேற்றம் பற்றியும், அவற்றை அமுல் நடத்துவதில் உள்ள சிக்கல் பற்றியும், நாடு முழுமையிலும் ஆதாரக் கல்வி துரிதமாகப் பரப்பப்படுவதற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்ந்தறிந்து, மத்திய சர்க்காருக்கு ஆலோசனை கூற, மத்திய சர்க்கார் கல்வி இலாகா, அகில இந்திய ஆதாரக் கல்விக் குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளதெனத் தெரிகிறது.

ஜூன் 30-ல் திருத்தக்குழு அறிக்கை

ஒரியர் ஆர்ப்பாட்டம் குறித்து குன்சுரு

'அது ஒரு பழங்கால நோக்கு; குழு அதை ஒரு பொருட்டாகக் கொள்ளாது.'

என, ஆந்திர மாநிலப் பகுதியில் உள்ள ஒரிய மொழியினர் செய்த ஆர்ப்பாட்டத்தைக் கண்ட மாநிலத் திருத்தக் குழு உறுப்பினரில் ஒருவரான எச். என். குன்சுரு குறிப்பிட்டார்.

குழு, பீகாரில் சுற்றுப் பயணம் செய்தபொழுதும், பீகாரில் உள்ள வங்க மக்களும் பீகாரிகளும் செய்த எதிர் ஆர்ப்பாட்டங்கள் குறித்தும், மேற்குறிப்பிட்டுள்ள கருத்தையே எச். என். குன்சுரு குறிப்பிட்டுள்ளது கருதத் தக்கது.

வங்காளத்தில் குழுவின் வேலை முடிந்துவிட்டதாகவும், 62,000 - கடிதங்களும் 6,000 நேர் சாட்சியங்களும் குழு, வங்கத்தில் பெற்றுள்ளன என்றும், அதிகப்படியான வாக்குமூலங்களும், கடிதங்களும், பீகாரிலிருந்தும் மேற்கு வங்கத்திலிருந்தும் கிடைத்துள்ளன என்றும் அவர் அறிவித்தார்.

அசாம், மணிப்பூர், உத்திர பிரதேசம், பெப்சு, இராஜஸ்தான், சவுராஷ்டிரா, கூச் முதலிய பகுதிகளில் சாட்சியங்கள் பெறவேண்டியிருக்கிறது என்றும், ஜூன் 30-ந் தேதிக்குள் பெரிதும் குழுவின் அறிக்கை உருவாகிவிடும் என்றும், அவர் நிருபர்களிடம் கூறியுள்ளார்.

'அரிசி ஆலைகளுக்குத் தடை விதிப்பது ஆபத்து'

'அதனுல் அரிசியின் விலை உயர்ந்துவிடும்'

கைக்குத்தல் பற்றி ஆந்திர நிலவரிக் குழு கருத்து

"அரிசி குத்தும் ஆலைகளுக்குத் தடை விதிப்பதைப் பெரும்பாலான மாவட்டத் தலைமை அதிகாரிகள் ஆதரிக்கவில்லை; ஆலைகளின்மீது விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டதும், புதிய ஆலைகள் பல தோன்றவும், அதனுல் உருவான போட்டியின் விளைவாகப் பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் அரிசி கிடைப்பதும் சாத்தியமாயிற்று என்றும், மீண்டும் ஆலைகளுக்குத் தடை விதிப்பதினுல் ஆலைகளில் தீட்டப்படும் அரிசியும், கைக்குத்தல் அரிசியும் விலையில் கூடிவிடக் கூடும் என்றும், அவ்வதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்."

"கைக்குத்தல் அரிசிக்குப் பாதுகாப்பு அளிக்க, ஆலைகளில் தீட்டப்பட வேண்டிய நெல் வகைகளையும், கைக்குத்தலுக்கு ஒதுக்கப்படும் நெல் வகைகளையும் வரையறுக்க வேண்டும் என்றும், அத்துடன் ஆலை அரிசிகளுக்கு தனி 'செஸ்' வரி விதிக்க வேண்டுமென்றும், ஆந்திர நிலவரிக் குழு அரசாங்கத்திற்கு அறிவித்திருக்கிறது.

அதுவுமன்றி, பெரிய அளவில் கைக்குத்தல் அரிசித் தொழிலை விரிவாக்க முடியாது என்றும், அரிசியைத் துல்லியமாகத் தீட்டக் கூடாது என ஆலைகளுக்குத் தடை விதிக்க வேண்டுமென்றும், பச்சரிசியை உண்பதற்கு பதில் புழுங்கல் அரிசியை உண்ண பொது மக்களைத் தூண்ட வேண்டுமென்றும், நிலவரிக் குழு ஆலோசனை கூறியுள்ளது.

அகில இந்திய கதர் கிராமத் தொழில் நிறுவனத்தின் ஆலோசனைக் கிணங்க ஆந்திர அரசாங்கம் ஒரு கைக்குத்தல் அரிசித் தொழில் திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறது. இத்திட்டம் பத்து இடங்களில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும். மொத்தத்தில் 2,000. குடும்பங்களுக்குத் தேவைப்படும் கைக்குத்தல் அரிசி தயாரிக்கப்படும். 200-லிருந்து, 250 பெண்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 200. நாட்களுக்கு இத்திட்டத்தால் வேலை கிடைக்கும்; இதற்கு ஆகும் ஆண்டுச் செலவு, ரூ. 1,44,400; இத்தொகையில் 1,21,200 ரூபாயை கிராமத் தொழில் நிறுவனம் உதவும்; மீதித் தொகையை ஆந்திர அரசாங்கமும், இந்தியப் பேரரசும் பகிர்ந்து கொள்ளும்!

மத்திய சர்க்காரின் மாற்றுந்தாய் மனப்பான்மைக்கு எதிர்ப்பு

மேற்கு வங்கத்தை டில்லி புறக்கணிக்கிறது

கல்கத்தா, பிப். 20—

"மேற்கு வங்கத்திடம் மத்திய சர்க்கார் இதுவரை மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் நடந்து வருகிறது,"

என்று, இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் மேகானந்த் ஷா குற்றம் சாட்டியிருக்கிருர்.

மேற்கு வங்க மருத்துவ மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில்தான் அவர் இப்படி குறிப்பிட்டார்.

"மத்திய சர்க்கார், தான் தீட்டிய பெரிய திட்டங்களிலெல்லாம் மேற்கு வங்கத்தின்மீது அனுதாபமின்றியே நடந்துகொண்டிருக்கிறது; சுதந்திரம் வந்த பிறகு மேற்கு வங்கம் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் பின் தங்கிப் போயிற்று"

என்று, மேகானந்த் ஷா மேலும் குறிப்பிட்டார்.

உள்நாட்டில் யுத்த - பயம் உள்ளதாம்

தனது படைகளுக்குப் பிரிட்டிஷ் ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தம் ஒன்றை இலங்கை செய்துள்ளதாகத் தெரிகிறது.

ஒப்பந்தம் பற்றிய முழு விவரங்களும் வெளியிடப்படவில்லை. தான் வாங்கிக்கொள்ள இருக்கும் ஆயுதங்களுக்கு இலங்கை, பணம் தந்துவிடுமென்றும் கூறப்படுகிறது.

"இலங்கையின் படைகள் உள்நாட்டுத் தற்காப்புக்காக மட்டுமே உபயோகிக்கப்படும்; தற்போதைய சர்வதேச நிலை பொறுத்த வரையில் வெளிநாட்டு யுத்தம் பற்றிப் பயமில்லை; ஆனுல் உள்நாட்டு யுத்த பயம்தான் இருக்கிறது," என்று இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலாவலை கூறியிருக்கிருர்.

கழகச் செய்திகள்

குளக்காட்டுப்புதூரில் கழகப் பொதுக்கூட்டம்

29—1—55ல், தி. மு. கழகச் சார்பில், தோழர் இரா. சண்முகம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள்: மருத் தவமணி, வி. எ. ராமநாதன், வி. கே. ராசு, டி. பி. மூர்த்தி ஆகியோர் பேசிய பின் தோழர் என். வி. நடராசன் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர். அவர் தமது உரையில், விவசாயிகளின் குறைகளை விரிவாகக் கூறியும், சர்க்காரின் போக்கைக் கண்டித்தும் 1½ லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து இவ்வூரில் அமைக்கப்பட்ட பம்பு செட்டுகளை எடுத்துவிடும்படி கூறும் அரசாங்கம் மக்களின் நலனில் அக்கரையுள்ளதென எவ்வாறு நம்ப முடியுமெனக் கேட்டும், திராவிடநாடு பிரிவினை பற்றியும் விளக்கிப் பேசினர்.

[அன்றைய கூட்டத்திற்கு முன்னர் தோழர் என். வி. நடராசன் அவர்கள், காய்ந்து கிடந்த வெற்றிலைத் தோட்டங்களை சுற்றிப் பார்த்தார். வெற்றிலைத் தொழிலாளர்கள் அவரிடம் தங்கள் குறைகளையெல்லாம் எடுத்துக் கூறினர். தோழர் என். வி. நடராசன், அவர்களுக்கு ஆறுதல் தந்து, இதுபற்றி அமைச்சர்களைச் சந்தித்து ஆவன செய்வதாகக் கூறினர்.]

திருப்பூர் தி. மு. கழகம்

30—1—55 மாலை 4 மணியளவில், தோழர் பி. இராமையா தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், புத்தாண்டிற்கான கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: மரி. செபத்தி; துணைச் செயலாளர்: கா. காத்தமுத்து; பொருளாளர்: சு. மாணிக்கம்; மாவட்டப் பிரதிநிதி: சொ. பரமசிவம்; விளம்பர உறுப்பினர்கள்: நா. இராமசாமி, சுப. சந்தானம், கு. அருள்வளவன், காத்தபெருமாள், நாகராசன். செயற் குழு உறுப்பினர்கள்: பி. இராமையா, கே. எம். அப்துல்காதர், ந. மாணிக்கம், அ. சிவப்பிரகாசம், சின்னப்பன், சராஜுதீன். பின்னர், சென்ற ஆண்டு வரவு-செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. கழக வளர்ச்சிக்காகச் சிங்கப்பூரிலிருந்து பொருள் திரட்டி அனுப்பிய தோழர்கள் மா. சிதம்பரம், மணியம் ஆகியோருக்கும், மற்றும் பொருளுதவிய தோழர்களுக்கும் பாராட்டுதல் தெரிவித்துக் கொண்டதோடு, கல்லக்குடி, தூத்துக்குடி அறப்போரில் மாண்டவர்களின் குடும்ப உதவி நிதிக்குப் பண உதவி அளிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆயக்குடி தி. மு. கழகம்

18—12—54-ல் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்திலும், 25—12—54-ல் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்திலும், தோழர் கே. எம் அனீபா செயலாளராகவும், தோழர் அ. வேலு துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சித்துக்காடு தி. மு. கழகம்

9—2—55ல், தோழர் கே. அடைக்கலம் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், தி. மு. கழகச் சார்பில் சொற்பயிற்சிக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டு, சொற்பயிற்சிக் கழகத்தின் செயலாளராகத் தோழர் எஸ். பழனிவேல் நியமிக்கப்பட்டார். பின்னர், மார்ச்சு திங்கள் மூன்றாவது வாரத்தில் கழகச் சார்பில் பொதுக் கூட்டம் ஒன்று நடத்துவதெனவும், இவ்வூரிலுள்ள 'ஔவை படிப்பக'த்தை இனிமேல் தி. மு. கழகச் சார்பில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

திருவில்லிப்புத்தூர் தி. மு. கழகம்

30—1—55 மாலை 6-30 மணிக்கு இவ்வூர்பொன் அரசப்பன் திடலில், தோழர் ச. செந்தியப்பன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், கழகப் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: கோ. பெருமாள்; துணைச் செயலாளர்: சு. இராமதாசு; பொருளாளர்: ச. செந்தியப்பன்; மாவட்டப் பிரதிநிதிகள்: கோ. பெருமாள்; சி. சுந்தரமகாலிங்கம். பின்னர், விருதை எம். எஸ். பெரியசாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

இராசிபுரம் 5-வது வார்டு தி. மு. கழகம்

1—2—55ல், தோழர் பி. சின்னண்ணன் தலைமையில் கழக நிர்வாகிகள் தேர்தல் கூட்டம் நடைபெற்றது. செயலாளர்: ஆர். தேசி; துணைச்செயலாளர்: அ. செங்கோடன்; பொருளாளர்: எஸ். ஏ. ஜெயராமன்; நகரக் குழு பிரதிநிதிகள்: அ. செங்கோடன்; டி. பதமனுபன்; செயற்குழு உறுப்பினர்கள்: ஆர். தேசி, அ. செங்கோடன், எஸ். ஏ. ஜெயராமன், குமுனிசாமி, டி. பத்மநாபன், பி. எம். ரங்கசாமி, சுப்பையன், ப. அண்ணாமலை, எம். எஸ். ராஜாராமன். பின்னர், முன்னாள் கழக நிர்வாகிகளுக்குப் பாராட்டுதல் தெரிவித்தும், மற்றும் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஆமதாபாத் — மணிநகர் தி. மு. கழகம்

6—2—55 மாலை 4 மணிக்கு, தோழர் அ. குப்புசாமி தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: ச. சந்திரன்; துணைச் செயலாளர்: செ. ச. இராமலிங்கம்; செயற்குழு உறுப்பினர்கள்: மு. சாமிதுரை, ர. ரத்தினம்.

வெள்ளவாவிப்புதூர் தி. மு. கழகத் துவக்கம்

30—1—55 இரவு 8 மணி அளவில், மூலனூர் தி. மு. கழகத் தோழர் எஸ். எம். பழனிச்சாமி தலைமையில், தி. மு. கழகக் கிளை துவக்கப்பட்டு தலைவர் அவர்களால் கொடி ஏற்று விக்கப்பட்டது தலைவர் தமது உரையில் 'தி. மு. கழகத்தின் நோக்கமும், நமது கடமையும்,' என்பது பற்றி சொற்பொழிவாற்றினர். பின்னர் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர் நா. இராமசாமி; துணைச் செயலாளர்: கு. வீரப்பன்; பொருளாளர்: போ. பெரியசாமி; மற்றும் எட்டு செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சமயநல்லூர் தி. மு. க.

1—2—55ல், தோழர் தி. குருசாமி தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: எஸ். இராமச்சந்திரன்; துணைச் செயலாளர்: தி. குருசாமி; பொருளாளர்: பெ. சி. கருப்பணன்; மாவட்டப் பிரதிநிதி: சு கருப்பணன்; விளம்பர உறுப்பினர்: வே. மணி. செயற்குழு உறுப்பினர்கள்: வே. கந்தசாமி, மு. இராமசாமி, கரியமால், க. இராமசாமி, ஆ. குருசாமி, தங்கவேல், சு. இசக்கி முத்து, நல்லமணி, இலக்குமணன், சு. வீரையா, சிங்கராஜ், காளிமுத்து, அ. மேகம், பாண்டியன். பின்னர் 'மறுமலர்ச்சி' படிப்பகத்தின் வரவு-செலவு கணக்குகள் ஒப்புக் கொள்ளப்பட்டது.

...எட்டெரு (பாலக்கரை) தி. மு. கழகம்

30—1—55 இரவு 7 மணிக்கு, கே. பி. ஆர். திடலில், தோழர் தொ. ப. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: தொ. ப. கோபாலகிருஷ்ணன்; துணைச் செயலாளர்: நா. ஜெயராமன்; பொருளாளர்: கே. பி. ரங்கசாமி; செயற்குழு உறுப்பினர்கள்: மு. வ. பழனியாண்டி, வெ. கிருஷ்ணன், ஆர். கிருஷ்ணன், க. பி. நாராயணசாமி, ந. ஜீவன், ப. க. ராஜகோபால், கோ. ப. ராதாகிருஷ்ணன், பெ. நிலக்கிழார், மாரியப்பன். பின்னர் மார்ச்சு மாதம் 6-ந் தேதியன்று கழக ஆண்டு விழா நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

ஆமதாபாத்—நரோடா தி. மு. கழகம் (கிளை)

13—2—55 மாலை 4 மணிக்கு மேற்படி 3-வது கிளைக் கழகத்தில் தோழர் மு. பெரியசாமி தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் புத்தாண்டிற்கான கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: கே ஜி சேகர்; துணைச் செயலாளர்: அ. கந்தசாமி; பொருளாளர்: இரா. நடராசன்; செயற் குழு உறுப்பினர்கள்: இரா. புஷ்பா, கு. பாலசுந்தரம், மு. சுப்புராயன், மு. பெரியசாமி, எம். எ. காதர்பாய், ஆ. நடராசன்; புத்தகக் காப்பாளர் க. ஆ. நடராசன்.

சேவூர் (வ. ஆ.) தி. மு. க.

12—2—55 மாலை 6 மணிக்கு, இவ்வூர் கழக நிலையத்திற்கருகில், தோழர் வி. இ. செயராமன் தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஏ. கே. குமாரவேலன், எஸ். ஏ. கைலாசம், வி. எஸ். கோவிந்தராசன், சுரதா ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கியும், இந்து மதத்தின் கேடுகளை விவரித்தும் சொற்பொழிவாற்றினர்கள். பின்னர் தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன.

பம்பாய் —கொலாபா தி. மு. கழகம்

27—1—55 காலை 9½ மணிக்கு, தோழர் கே. கே. இராமநாதன் தலைமையில் நடைபெற்ற கழக அவசர செயற் குழு கூட்டத்தில், விரைவில் கழகத்தின் ஓராண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவது என்று முடிவு செய்யப்பட்டது. வரவு-செலவு, மற்றும் சில பொருட்கள் குறித்தும் விவாதித்து முடிவு செய்யப்பட்டது.

சேந்தன்குடி நகர தி.மு.க.

28—1—55ல், தோழர் இரா. குழந்தை தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள், துரைசாமி, பி. நடராசன், இரா. குழந்தை, எம். தங்கவேல், டி. சபாபதி, ஏ. சுப்பிரமணியம், ஆர். கண்ணு ஆகியோர் கழகக் கட்டுப்பாடு, கழகத் தோழர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறை ஆகியவை பற்றி சொற்பொழிவாற்றிய பின், விரைவில் கழக ஆண்டு விழா நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இராமேசுவரம் தி. மு. க.

31—1—55-ல், பாண்டியன் நினைவுப் படிப்பகத்தில், தோழர் எஸ். துரைராசு தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: வி. மரியமுத்து; துணைச்செயலாளர்: மு. மாரிமுத்து; பொருளாளர்: சி. துரைராசு; மாவட்டப் பிரதிநிதி: அ. காசிம்முகம்மது; செயற்குழு உறுப்பினர்கள்: கு. தனுஷ்கோடி, ம. ஷண்முகசுந்தரம், மு. முகம்மது முகைதீன், ரா. மாடசாமி, ச. சுப்பிரமணியன், அ. பெரியசாமி, மு. ச. ஆறுமுகம்.

சேலம் மாவட்டத்தில் ஈ. வெ. கி. சம்பத் சுற்றுப்பயணம்

குமாரபாளையத்தில் தி.மு.க. பொதுக் கூட்டம்

5—2—55 மாலை 6 மணிக்கு தோழர் ஜே. கே. கே. சுந்திரராசன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் "பண்டைய திராவிடரும், இன்றைய நிலையும்" எனும் பொருள் குறித்து தோழர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றினர்.

சேவியமேட்டில் தி. மு. கழகம் துவக்கம்

"புதுவை தி. மு. கழகத்தின் கிளையாக, பாகூர் கொம்யூன் சேலியமேடு என்னும் கிராமத்தில் தி. மு. கிளைக்கழகம் துவக்கப்பட்டிருக்கிறது. இதுவரை 5 ஊர்களில் கிளை கழகங்கள் ஏற்பட்டுள்ளன. இன்னும் பல ஊர்களிலும் கிளைக் கழகங்கள் தோற்றுவிக்கத் தோழர்கள் முயற்சி செய்து வருகின்றனர்," என்று புதுவைத் தோழர் ச. சிவப்பிரகாசம் அறிவித்துள்ளார்.

வனவாசியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

14—2—55 மாலை 6 மணிக்கு, மேற்கு வனவாசி நெசவாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்திற்கு எதிரில் உள்ள மைதானத்தில் தோழர் க. வெங்கடாசலம் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் டி. கே. குருநாதன், எஸ். அப்பாவு, ப. கண்ணன், பி. ராமலிங்கம் ஆகியோர் தி. மு. கழகத்தின் கொள்கைகள் பற்றியும், நெசவாளர்களின் நிலை பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

பின்னர், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், 'தற்கால அரசியல் நிலை' குறித்தும், ஆவடி காங்கிரசில் நிறைவேற்றப்பட்டுள்ள 'சோஷலிசம் போன்ற சமூக அமைப்பு' என்ற தீர்மானத்தின் பித்தலாட்டம் குறித்தும், மத்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றியும், அந்தத் திட்டம் தென்னாட்டு மக்களுக்கு எவ்வித நன்மைகளையும் அளிக்காமல் வடநாட்டு மக்களுக்குத்தான் பயன்படுகிறது என்பதையும், மற்றும் பல கருத்துக்களை விளக்கியும் நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

தோழர் சம்பத் அவர்களுக்குப் பல கிளைக் கழகங்கள், மன்றங்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

திருக்குளம்பூரில் தி. மு. கழகத் துவக்கம்

8—2—55 மாலை 6 மணிக்கு இவ்வூர் வ. உ. சி. திடலில் தோழர் நல்லசுப்பையா தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகத் துவக்க விழாவில் தோழர்கள் மீ. சு. இளமுருகு-பொற்செல்வி, மணிவண்ணன், நல்லமணி, மு. இளம்வழுதி, சந்திரன், பாண்டியநெடுஞ்செழியன் ஆகியோர் 'திராவிட சமுதாய, நாடு' பற்றி சொற்பொழிவாற்றினர். தோழர் இளங்கோவன் இயக்கப் பாடல்கள் பாடினர். தோழர்களுக்குக் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

சென்னை 37-வது வட்ட தி. மு. கழகம்

13-2-55 பிற்பகல் 3 மணிக்கு, தோழர் கோ. இளவரசு தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில், கடந்த 8 மாதகால வரவு-செலவும், கலைவிழா வரவு-செலவும் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர், 37-வது வட்ட தி. மு கழகத்திற்கும், அடுத்துள்ள புதுப்பேட்டையிலிருக்கும் திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்று தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுடன் தோழர்கள் குள்ளம்பட்டி ராமலிங்கம், சலகண்டபுரம் டி. கே. குருநாதன், ஈரோடு எஸ். அப்பாவு ஆகியவர்களின் சுற்றுப் பிரயாணத்தின் முதல் நாள் நிகழ்ச்சி 9—2—55-ல் மோகனூரில் துவக்கப்பட்டது. அன்று மாலை 6-30 மணிக்கு அழகிரி திடலில் தோழர் அரங்கசாமி தலைமையில் கூட்டம் துவங்கியது. தோழர்கள் ப. இராமலிங்கம், டி. கே. குருநாதன், எஸ். அப்பாவு ஆகியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டங்கள் குறித்தும், கொள்கைகள் குறித்தும் பேசினர். பின்னர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் சமுதாய நிலை குறித்தும், அரசியல் நிலை குறித்தும் பேசினர்.

★

வேலூர் (சேலம்)

10—2—55-ல், சுற்றுப்பயண நிகழ்ச்சியின் இரண்டாவது நாள் பொதுக்கூட்டம் வேலூரில் (சேலம்) வ. உ. சி. திடலில் மாலை 7 மணிக்கு லோ. கருப்பையா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் குள்ளம்பட்டி ராமலிங்கம், சலகண்டபுரம் டி. கே. குருநாதன், ராமநாதன், எஸ். அப்பாவு ஆகியவர்கள் சமுதாய, அரசியல் கொள்கைகள் குறித்துப் பேசியபின், தோழர் ஈ. வெ. கி. சம்பத், 'அகில இந்தியக் கட்சிகளும், திராவிட முன்னேற்றக் கழகமும்' என்ற பொருள் குறித்து மிக விளக்கமாகவும் தெளிவாகவும் பேசினர்.

வேலூர் (சேலம்) தோழர் இலக்குமணன் துணைவியார் அஞ்சலி—இலக்குமணன் அவர்களுக்கு 7—2—55-ல் ஆண் மகவு பிறந்தது. தாயும், சேயும் நலம். குழந்தையின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1-ம், வேலூர் (சேலம்) அண்ணா மன்றத்தார் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்காக ரூ. 1-ம் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

★

வெண்ணந்தூர்

11—2—55-ல், சுற்றுப் பிரயாணத்தின் மூன்றாவது நாளான இன்று, ராசிபுரம் வட்டம் வெண்ணந்தூரில் 'பாவடி' மைதானத்தில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் ப. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள்பற்றி விளக்கினர். பின்னர், தோழர் இ. ஆர். கிருஷ்ணன் கொடியேற்றி வைத்தார்; தோழர்கள் டி. கே. குருநாதன், எஸ். அப்பாவு, கே. வி. கே. ராமசாமி ஆகியோர் பேசிய பின், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், 2 மணி நேரம் சமூக, அரசியல் விளக்கவுரையாற்றினர். பல கழகங்கள் சார்பாக அவருக்கு மலர் மாலைகளும், துண்டு மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

★

காளப்பநாய்க்கன்பட்டி

12—2—55ல், சுற்றுப் பிரயாணத்தின் நான்காவது நாளான இன்று, காளப்பநாய்க்கன் பட்டியில், வ. உ. சி. மைதானத்தில், மாபெரும் பொதுக் கூட்டம் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ப. இராமலிங்கம், டி. கே. குருநாதன், எஸ். அப்பாவு, ஆகியோர் பேசிய பின், தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்கள் 2½ மணிநேரம் அரசியல் பற்றி விரிவுரையாற்றினர். பல தோழர்கள் அவருக்கு மலர் மாலைகளும், கைத்தறியாடைகளும் அணிவித்தனர். 'நம் நாடு' இதழ் வளர்ச்சி நிதிக்காக முறையே இராமநாதபுரம் புதூர் தி. மு. க. ரூ. 1-ம், சேந்தமங்கலம் தி. மு. க. ரூ. 1-ம், செல்லப்பம்பட்டி தி. மு. க. ரூ 1-ம் தோழர் சம்பத் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

தி. மு. கழகப்.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

காஞ்சிர் ஆரவாரப் பேரொலி எழுப்ப வானளாவிய கம்பத்தில் கழகக் கொடியினை ஏற்றி வைத்தார்கள்.

பின், பொதுக் குழு காலை 10½ மணியளவில் துவங்கியது.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் கடந்த பொதுக் குழுவிற்கும், இந்தப் பொதுக் குழுவிற்கும் இடையில் உள்ள காலத்தில் கழகத்தின் நடவடிக்கைகளையும், நாட்டின் நிலையையும், நமது எதிர்கால பணியினையும் குறிப்பிட்டுக் காட்டி விரிவாகப் பேசினார்.

பிறகு நாடகத் தடைச் சட்டம் குறித்து விவாதம் நடைபெற்றது.

அது குறித்து தீர்மானம் மேற் கொள்ளப்பட்டதும் இடைவேளை உணவுக்காக 2¼ மணியளவில் குழு கலைந்தது.

பின்னர் மீண்டும் மாலை 3½ மணிக்கு கூடி பல பிரச்சினைகள் குறித்தும் விவாதித்து நல்ல பல முடிவுகளை மேற்கொண்டது.

புதிய பொதுக் குழுவுக்கு முன் இந்த பொதுக் குழுக் கூட்டமே இறுதிக் கூட்டம் என்றும், இந்தக் காலத்தில் கழக நடவடிக்கைகளில் தமக்கு உறுதுணையாயிருந்த பொதுக் குழு உறுப்பினர்களுக்கும், அவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொது உறுப்பினர்களுக்கும் பொதுச் செயலாளர் நன்றி தெரிவித்துக் கொண்டதும் கூட்டம் இனிது முடிவுற்றது.

பொதுக் குழு உறுப்பினர்களுக்கான எல்லா வசதிகளையும், உணவு, உறையுள், போக்குவரத்து போன்றவை உள்ளிட்ட எல்லாவற்றையும் வெகு சிறப்பாகக் கோவை தி. மு. கழகத் தோழர்கள் செய்திருந்தனர்.

தோழர்கள் சே. அ. இராசமாணிக்கம், செயலாளர் பழனிச்சாமி, சி. டி. தண்டபாணி, அரசு, இருஷ்ணமூர்த்தி, சி. எஸ். ஆர். மாணிக்கம், வணங்காமுடி, சேரலாதன், யுகேழேந்தி, அப்பாவு, ஜானகிராம், மற்றும் கழக செயற் குழு உறுப்பினர்களும், இந்த ஏற்பாடுகளை திறம்படச் செய்வதில் பெரும் பங்கேற்றிருக்கின்றனர்.

அவர்கள் எல்லோருக்கும் பொதுச் செயலாளர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

மலைத்தோட்ட விவசாய வருமான வரி மசோதா

சென்னை, பிப். 21—

மலைத்தோட்டங்கள் விவசாய வருமான வரி மசோதா, இன்று மாலை சட்ட (கீழ்) சபையில் சட்டமாக்கப்பட்டுவிட்டது.

இம்மசோதா, தேயிலை, காப்பி, ரப்பர், ஏலக்காய், சிங்கோனா மலைத் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மீது படிப்படியாக உயரும் முறையில் விவசாய வருமான வரி விதிக்க வழிசெய்கிறது.

இம்மசோதாவையொட்டி, 5 ஏக்கர் முதல் 10 ஏக்கர் வரையுள்ள தோட்டங்களுக்கு விதிக்கப்படும் தீர்வையில் 1 ரூபாய் குறைக்க வேண்டுமென்ற சர்க்காரின் திருத்தமும் நிறைவேறியது.

இச்சட்டம் செயல்படும்போது சர்க்கார் அதை நன்குகப் பரிசீலிக்கும் என்றும், ஏதாவது சங்கடங்கள் ஏற்பட்டால் அவற்றுக்குப் பரிகாரம் காண சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமென்றும், மேற்படி மசோதாவை சட்டமாக இயற்றும்படி கோரும் பிரேரணையைக் கொண்டுவந்த அமைச்சர் மாணிக்கவேலர் உறுதி கூறினார்.

சென்னை—கிண்டியிலுள்ள எஞ்சினியரிங் கல்வி அதிகாரிகள், கல்லூரிகளிலுள்ள ஆராய்ச்சிச் சாலைகளின் உபயோகத்திற்காக ஒரு 'டெலிவிஷன்' கருவி வாங்க ஏற்பாடு செய்துள்ளனராம்.

ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யாற்றுவதற்காகவே தனிக்குழு நியமிக்க வேண்டுமென்று, பொதுக்குழு, பொதுச்செயலாளரைக் கேட்டுக் கொள்கிறது.

சட்டத்தின் துணைகொண்டு சர்க்கார் தி. மு. கழகத்தினர் நடத்தும் நாடகங்களைத் தடுக்க முன்வந்தால், சட்டப்படியும், கிளர்ச்சி மூலமாகவும், எதிர்ப்பு முறையிலும் நடவடிக்கை எடுக்க, பொதுச் செயலாளருக்கு பொதுக் குழு அதிகாரமளிக்கிறது.

—நெடுஞ்செழியன்; பொன்னம்பலனார்

★

மாநில மாநாடு

தி. மு. க. மாநில மாநாட்டை ஜூன் திங்கள் (இறுதி கிழமையில்) திருச்சியில் நடத்துவதென்று இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

மாநில மாநாடு ஜூன் திங்களில் நடத்தப்படுவதற்குள், ஏற்கனவே உள்ள உறுப்பினர்களைக் கொண்டு, ஒவ்வொரு கிளைக் கழகமும் புதிய தேர்தல் நடத்தி, மாவட்டக்கழகம் அமைத்து, அதிலிருந்து முறைப்படி பொதுக்குழு அமைத்துக் கொள்ள வேண்டும் என்று இப்பொதுக் குழு கருதித் தீர்மானிக்கிறது. புதிய பொதுக்குழு கூடி, மாநாட்டுக்குத் தலைவராகப் பொதுச் செயலாளரை தேர்ந்தெடுத்துக் கொள்வதென்றும், இதனை ஏப்ரல் இறுதியில் முடித்து விடுவதென்றும் இந்த பொதுக் குழு தீர்மானிக்கிறது.

மாநில மாநாட்டுக்கு, துவக்கச் செலவுக்காக குறைந்தது 25 ஆயிரம் ரூபாய் நிதி தேவைப்படுவதால் இந்தத் தொகையைத் திரட்ட இரண்டு முறைகளைக் கையாளுவது என்று இந்தப் பொதுக் குழு தீர்மானிப்பதுடன், இந்த நிதி திரட்டும் காரியத்தைக் கவனிக்க, கீழ்க்கண்டவர்கள் கொண்ட ஒரு தனிக் குழுவை அமைக்கிறது:—

(1) தி. மு. க., நம் இயக்கப் பற்றுள்ள கலைஞர்களைக் கொண்ட ஒரு சிறு நாடகக் குழுவை நிறுவி, தமிழகத்தில் எல்லா முக்கியமான ஊர்களிலும் நாடகங்களை நடத்தி, நிதி திரட்டுவது;

(2) நாடக மூலம் நிதி திரட்டியான பிறகு, மாவட்டங்களுக்குப் பிரிவுத் தொகை நிர்ணயம் செய்து, தலைமை நிலைய நன்கொடை குறிப்புச் சீட்டு மூலம் பெறுவது;

(3) இரு முறைகளிலும் நிதி திரட்டுவதற்கான காரியத்தைக் கவனிக்க தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஆசைத்தம்பி, மு. கருணாநிதி, அ. பொன்னம்பலனார் கொண்ட கமிட்டியும், அவர்கள் மேலும் ஆறு பேர் வரை சேர்த்துக் கொள்வதற்கு அதிகாரமும் அளிக்கிறது.

— அண்ணாதுரை

★

தொழிலாளரிடை சேவை

தொழிற் சங்கங்களில் நேரடியாக தி. மு. கழகத் தோழர்கள் ஈடுபட்டு நடத்துவதென்ற அரக்கோணம் பொதுக் குழுவின் 1953-ம் வருட மே மாத 31-ம் தேதி தீர்மானத்தை, நடைமுறைக்குக் கொண்டுவரும் முறையில், ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகள் தொழிலாளர் பகுதிகளில் பணி புரிந்து தொழிலாளர்களை ஒன்று திரட்டும்படிக்கும், தொழிற் சங்க அமைப்புக்கான சூழ்நிலை ஏற்படுவதை அவ்வப்போது தி. மு. கழகத் தலைமை நிலையத்துக்கு அறிவிக்கும்படியும் இக்குழு கேட்டுக்கொள்ளுகிறது.

—சே. அ. இராசமாணிக்கம்; —ஜி. பராங்குசம்.

★

சட்ட திட்டத் திருத்தம் பற்றிய தீர்மானம்

திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட திட்டங்களில் கீழ்க்கண்ட திருத்தங்களையும், சேர்ப்புகளையும் ஏற்று, பொதுக்குழு திருத்துகிறது:—

திருத்தம் (1):

சட்ட திட்டப் புத்தகம்—பக்கம் 6-ல், 23-வது விதிக்கடுத்து 'நகரக்குழு' என்ற தலைப்பை 'நகரக்கிளை' என்று திருத்தவும்;

திருத்தம் (2):

சட்ட திட்டப் புத்தகம்—பக்கம் 6-ல், 24-வது விதியில், 'நகரக்குழு' என்றிருப்பதை 'நகரக்கிளை' என்று திருத்தவும்:

திருத்தம் (3):

சட்ட திட்டப் புத்தகம்—பக்கம் 6-ல், இப்பொழுதுள்ள 25-வது விதியை நீக்கி, கீழ்க்காணும் விதியைச் சேர்த்துக்கொள்ளவும்:—

"25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட ஒவ்வொரு வட்டாரமும் (Municipal Ward) நகரக்கிளைச் செயலாளருக்கு அறிவித்து விட்டு, நகரச் செயற்குழுவின் மேற்பார்வையிலும், கட்டுப்பாட்டின் கீழும் ஒரு வட்டாரக் கிளையை அமைத்துக்கொண்டு இயங்கலாம்;

(அ) வட்டாரக் கிளை ஒவ்வொன்றும் செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர் உட்பட ஏழு பேர்களைக் கொண்ட ஒரு வட்டாரக் குழுவை தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்;

(ஆ) வட்டாரக் குழுவுக்கும், நகரக் குழுவுக்கும் இடையே உள்ள தொடர்பு, நகரக் குழுவின் நடவடிக்கைகளுக்கு, நகரக் குழுவின் மேற்பார்வையில், கட்டுப்பாட்டின் கீழ் துணை புரியும் அளவே உண்டு."

திருத்தம் (4):

சட்ட திட்டப் புத்தகம்—பக்கம் 6-ல், இப்பொழுதுள்ள 26-வது விதியை நீக்கி கீழ்க்காணும் விதியைச் சேர்த்துக்கொள்ளவும்:—

"ஒவ்வொரு நகரக் கிளையும் (பொது உறுப்பினர்கள் அனைவரும் அடங்கியது) 2 ஆண்டுக்கு ஒரு முறை, பொதுச்செயலாளர் குறிப்பிடும் நாளில்—செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர், செயற்குழுவினர் — ஆகியோரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்."

—ஈ. வெ. கி. சம்பத்; —கே. ஏ. மதியழகன்.

★

அனுதாபம்

விருதுநகர் நகர சபைத் தலைவரும், பாண்டிய மண்டலத்தில் திராவிட இயக்க வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவருமான திரு. எம். எஸ். பெரியசாமி அவர்களும், தோழர் கண்ணதாசன் அவர்கள் தந்தையார் திரு. சாத்தப்பன் அவர்களும் இயற்கை எய்தியது குறித்து, இப்பொதுக் குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

விழிப்புற்ற திராவிடத்தை...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

குறிப்பாகத் தமிழகத்திலே, கடந்த பல்லாண்டுகளாக திராவிடர் இயக்கத்தவர்தான், 'சமதர்மம்' என்ற இலட்சியத்தை, அதன் உண்மையான பொருளுடன் பரப்பி வருகிறார்கள்.

"இன்று நாடெங்கும் 'சமதர்மம் வேண்டும்' எனும் இலட்சியம் மக்களின் உள்ளங்களிலே பதிந்துவிட்டிருக்கிறது.

"இந்த நேரத்திலே காங்கிரஸ், 'சோஷலிசம் மாதிரி என்ற சமூக அமைப்பு' என்று கூறுவது நாணயமானதுதானா?

"காங்கிரசின், 'சோஷலிசம் போன்ற' என்ற தீர்மானம், இந்த நாட்டு மக்களின் உள்ளத்தைத் திருடுவதற்காகத் தானே!

"'காங்கிரஸ் இனி ஏழைகளுக்கு வாழ்வளிக்காது,' என்ற எண்ணம் மக்கள் உள்ளத்தில் வேரூன்றிவிட்ட பிறகு, அந்த நிலையை மாற்றுவதற்காக, 'நாங்களும் சோஷலிசப் பாதையில் தான் செல்கிறோம்,' என்று காட்டிக் கொள்வதற்காகத் தானே இப்போது ஆவடியில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்?

"சோஷலிசம், சமதர்மம் என்ற சொல் மந்திரமுமல்ல, தந்திரமுமல்ல; வாழ்க்கைத் தத்துவம் அது!

"இந்த நாட்டிலோ, அல்லது உலகத்தின் வேறெந்த நாட்டிலோ 'சோஷலிசம்' என்ற சொல் ஓர் பொருளிலே, அர்த்தத்திலே கருத்து வேறுபாடு இடையாது; ஆனால், அந்த சோஷலிசத்தை எப்படி நடைமுறைக்குக் கொண்டுவருவது என்பதிலே கருத்துவேறுபாடு கொண்டிருக்கலாம்; ஆனால், நமது காங்கிரஸ் நண்பர்கள், சோஷலிசம் என்ற வார்த்தையின் பொருளையே சவாலுக்கு அழைக்கிறார்கள்.

"'சோஷலிசம் இந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத் தத்துவமாக வேண்டும்,' என்று நாம் கடந்த பல ஆண்டு காலமாக எடுத்துக்கூறி வருகிறோம்.

"கம்யூனிஸ்டுகள் கூட சோஷலிசத்தைப் பற்றிப் பேசுகிறார்கள்.

"மதவாதிகள் எப்படி 'ஆண்டவனைப் பற்றி அரை டஜன் பேர்களுக்கு மட்டுமே தெரியும்—மற்றவர்கள் ஆண்டவனைக் காண இந்த அரை டஜன் பேர்களின் காலைக் கழுவி காணிக்கை செலுத்தினாலே போதும்,' என்கிறார்களோ, அதே போலத்தான் கம்யூனிஸ்டுகளும், சோஷலிசம் பற்றி, "மக்களே, உங்களுக்கு அதைப்பற்றித் தெரியாது; எங்களில் சிலருக்கே அதுபற்றித் தெரியும்; சோவியத் சொர்க்கத்தில் சோஷலிசம் தாண்டவமாடுகிறது; எனவே, எங்களை நம்புங்கள்; எங்களைப் பின்பற்றுங்கள் — நாங்கள் காட்டுகிறோம் சோஷலிசத்தை"—என்று கூறுகிறார்கள்.

"ஆனால், நாம்தான் சோஷலிசத்தைப் பற்றி விளக்கம் கூறி, அந்த சமதர்ம இலட்சியத்தை ஜனநாயக முறையில் அடைய முடியும் என்பதற்கான விளக்கத்தையும் கூறிவருகிறோம்; அதற்கான வகையில் நாட்டில் ஜனநாயகப் பண்புகள் வளருவதற்கும் பாடுபடுகிறோம்.

"அடுத்து, ம. சோ. கட்சியினர், சோஷலிசம் பற்றிப் பேசுகிறார்கள்; அவர்களது கருத்து, இந்தத் தென்னாடு மக்களுக்கு வாழ்வு தராது. அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற 'இந்திய ஒன்று' என்ற அடிப்படையில் அமைகிற எந்த வாழ்க்கைத் தத்துவும் திராவிடர்களின் வாழ்வுக்குப் பயன் படாது. அவர்கள் கூறுகிற சமதர்ம இலட்சியம் வட நாட்டு மக்களை வாழ்விக்கவும், தென்னாட்டு மக்கள் தேயவுமான நிலையைத்தான் வளர்க்கும். திராவிடர்களுக்கு, 'ஏக இந்தியா' வின் வாழ்வு கிடைக்காது. எனவேதான் ம. சோ. கட்சியின் சோஷலிச இலட்சியம் தென்னாட்டு மக்களுக்குப் பயன்படாது என்று நாம் கூறுகிறோம்.

"அடுத்து, காங்கிரஸ் இப்போது சோஷலிசம் பற்றி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

"ஆடுகளுக்குப் பாதுகாப்பு, புலிகளின் சங்கத்திலிருந்தா கிடைக்க முடியும்? அது போலத்தான், பணக்கார, முதலாளி வர்க்கங்களின் கூடாரமாகிவிட்ட காங்கிரஸ் கட்சியினரின் 'சோஷலிசம் மாதிரி' என்ற தீர்மானமும் இருக்க முடியும்.

"இதைச் சொல்லுகிற காங்கிரஸ்காரர்களையும், இவர்களின் மாதிரிகளையும் நமக்குத் தெரியாதா? கடந்த ஏழாண்டு காலத்தில் அவர்களை நாட்டு மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

"இந்தியத் துணைக்கண்டத்தில், வேறெந்த மாநிலத்தை வேண்டுமானாலும் ஏமாற்றி விடலாம்; ஆனால், விழிப்புணர்வு கலந்திருக்கிற திராவிடத்தை—குறிப்பாகத் தமிழகத்தை இந்த 'சோஷலிசம் மாதிரி' என்ற தீர்மானத்தால் ஏமாற்றிவிட முடியாது என்பதை காங்கிரஸ்காரர்கள் உணர வேண்டும்."

தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணாதுரை

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

பிப். 23: மாலை 6 மணிக்கு: சல்லிப்பட்டி (உடுமலை வட்டம்)

பிப். 24: மாலை 6 மணிக்கு: மூலனூர் (தாராபுரம் வட்டம்)

தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், அ. பொன்னம்பலனார் ஆகியவர்களும் இச்சுற்றுப்பிரயாணத்தில் கலந்துகொள்வார்கள்.

தி. மு. கழகக் கூட்டம்

23—2—55 மாலை 6½ மணிக்கு, மஞ்சிமேட்டில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் சே. சதாசிவம் தலைமையில் நடைபெறும். தோழர் கண்ணப்பா பேசுவார். அன்று காலை 8 மணிக்கு அண்ணா படிப்பகத் திறப்பு விழா தோழர் திராவிடமணி தலைமையில் நடைபெறும். தோழர் பி. ஈ. கண்ணப்பா பேசுவார்.

சொற் பயிற்சிக் கூட்டம்

23—2—55 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் செ. பிரியாதுரை தலைமையில் 'இலட்சியம்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட அரசியல் மாநாடு வரவேற்புக் கமிட்டி உறுப்பினர்கட்கு

24—2—55 மாலை 6 மணிக்கு, சென்னை, இராயப்பேட்டை, எண் 65, பீடர்ஸ் ரோடில், திராவிட அரசியல் மாநாடு வரவேற்புக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.